சென்னை எழும்பூரில் ரூ.10 கோடி மதிப்பில் புனரமைக்கப்பட்ட கட்டடம்!

100 வருடங்கள் பழமையான 10 லட்சம் அரிய ஆவணங்கள் ஜப்பானிய திசு முறையில் செப்பனிடும் பணி!

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

சென்னை, பிப். 20–

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்ட சென்னை, எழும்பூரில் உள்ள தமிழ்நாடு ஆவணக்காப்பகத்தின் பழமையான அலுவலக கட்டடம் மற்றும் 15 லட்சம் ரூபாய் செலவில் புதிதாக அமைக்கப்பட்ட கண்காட்சிக் கூடம் ஆகியவற்றைத் திறந்து வைத்து, ஆவணகாப்பகத்தில் பாதுகாக்கப்பட்டு வரும் 100 வருடங்கள் பழைமையான 10 லட்சம் அரிய ஆவணங்களை ஜப்பானிய திசு முறையில் (Japanese Tissue) செப்பனிடும் பணிகளை தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடுதுணைமுதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (19.2.2026) உயர்கல்வித் துறையின் கீழ் செயல்பட்டு வரும் தமிழ்நாடு ஆவணக்காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சித்துறையின் சார்பில் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்ட சென்னை, எழும்பூரில் உள்ள தமிழ்நாடு ஆவணக்காப்பகத்தின் பழமையான தலைமை அலுவலக கட்டடம் மற்றும் 15 லட்சம் ரூபாய் செலவில் புதிதாக அமைக்கப்பட்ட கண்காட்சிக் கூடம் ஆகியவற்றைத் திறந்து வைத்து, ஆவணகாப்பகத்தில் பாதுகாக்கப்பட்டு வரும் 100 வருடங்கள் பழைமையான 10 லட்சம் அரிய ஆவணங்களை ஜப்பானிய திசு முறையில் (Japanese Tissue) செப்பனிட்டுப் பாதுகாக்கும் பணிகளை தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டை முன்னணி மாநிலமாக உருவாக்கும் வகையில் பல புதிய கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதோடு, பழமையான கட்டமைப்புகளை புனரமைத்து வரலாற்று சிறப்புகளை வருங்கால சந்ததியினருக்கு கொண்டு சேர்த்து வருகின்றார்.

தமிழ்நாடு அரசின் உயர்கல்வித் துறையின் கீழ் செயல்பட்டு வரும் தமிழ்நாடு ஆவணக்காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சித்துறை தமிழ்நாட்டின் வரலாறு, பண்பாடு மற்றும் நிர்வாகம் சார்ந்த அரிய ஆவணங்களைப் பாதுகாத்து வரும் தனது சேவையில் நூறு ஆண்டுகள் கடந்து சாதனை படைத்து வருகிறது.

கடந்த 1909-ஆம் ஆண்டு "மெட்ராஸ் ரெக்கார்டு ஆபீஸ்" என்ற பெயரில் தொடங்கப்பட்டு, 1973-இல் "தமிழ்நாடு வரலாற்று ஆராய்ச்சி ஆவணக்காப்பகம்" என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டு, 2009-ஆம் ஆண்டு தனது 100-வது ஆண்டை நிறைவு செய்தது.

சுமார் 40 கோடி ஆவணங்கள் கொண்டுள்ள இக்காப்பகம், ஆராய்ச்சியாளர்களின் மிகச்சிறந்த தேடல் களமாக உள்ளது. தமிழ்நாட்டின் விடுதலை வரலாறு, சமூக நீதி வரலாறு, அரசு நிர்வாக வரலாறு மற்றும் பிரிட்டிஷ் ஆட்சி கால அரசுத் துறைகளின் காலவாரியான ஆவணங்கள், நில வரைபடங்கள், நில ஆவணங்கள் உள்ளிட்டவை ஆவணக் காப்பகத்தில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

இன்று திறந்து வைக்கப்பட்ட நவீன கண்காட்சிக் கூடத்தில் வெள்ளையர்களை எதிர்த்து போரிட்ட வீர பாண்டிய கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்டதை விவரிக்கும் ஆவணம், மெட்ராஸ் ராஜதானி, தமிழ்நாடு என பெயர் மாற்றம் செய்யப்பட்ட ஆவணம், சென்னையை எம்டன் கப்பல் தாக்கியது குறித்த ஆவணம் உள்ளிட்ட அரிய வரலாற்று ஆவணங்கள் பொதுமக்களும், மாணவர்களும் பார்வையிடும் வகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இந்நிகழ்ச்சியில் இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர் பாபு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், பெருநகர சென்னை மாநாகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், உயர் கல்வித் துறை செயலாளர் முனைவர் பொ. சங்கர், தமிழ்நாடு ஆவணக்காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சித் துறை ஆணையர் திருமதி.சு. மலர்விழி, கல்லூரி கல்வி ஆணையர் திருமதி எ.சுந்தரவல்லி, தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் முனைவர் ச. விசாகன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

திடக்கழிவுகள் மேலாண்மை விதிகள்–2026ன்படி பெருமளவு கழிவு உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர்கள் சென்னை மாநகராட்சியின் இணையதளத்தில் கட்டாயம் பதிவு செய்ய வேண்டும்!

சென்னை, பிப்.20–

இந்திய அரசு, திடக்கழிவு மேலாண்மை விதிகள்–2026 (Solid Waste Management Rules, 2026) குறித்த அரசிதழ் அறிவிப்பை 28.01.2026 அன்று வெளியிட்டுள்ளது. இந்த விதிகள் 01.04.2026 முதல் அமலுக்கு வரப்படவுள்ளது.

திடக்கழிவுகள் மேலாண்மை விதிகள், 2026ன் படி, கீழ்கண்ட அளவுகோள்களில் ஏதேனும் ஒன்றை பூர்த்தி செய்யும் நிறுவனங்கள் / நிலையங்கள் "பெருமளவு கழிவு உற்பத்தியாளர்கள் (Bulk Waste Generators – BWG) ஆக வகைப்படுத்தப்படுகின்றன:

20,000 சதுர மீட்டர் அல்லது அதற்கு மேற்பட்ட மொத்த தள பரப்பளவு கொண்ட கட்டிடம்; அல்லது

தினசரி 40,000 லிட்டர் அல்லது அதற்கு மேற்பட்ட நீர் பயன்பாடு; அல்லது

தினசரி 100 கிலோ அல்லது அதற்கு மேற்பட்ட திடக்கழிவு உற்பத்தி செய்பவர்கள்.

இந்த வரையறை, நிறுவன பயனாளர்கள், வணிக நிறுவனங்கள், குடியிருப்பு சங்கங்கள்/சொசைட்டிகள், ஹோட்டல்கள், மருத்துவமனைகள், கல்வி நிறுவனங்கள், ஐ.டி. பூங்காக்கள், திருமண மண்டபங்கள், வணிக வளாகங்கள், சந்தைகள், தொழிற்சாலைகள் மற்றும் பிற பெரிய நிறுவனங்களையும் உட்கொள்ளும். திடக்கழிவுகள் மேலாண்மை விதிகள்–2026ன் விதிமுறைகளின்படி, பெருநகர சென்னை மாநகராட்சி வரம்பிற்குள் உள்ள அனைத்து பெருமளவு கழிவு உற்பத்தியாளர்களுக்கும் கீழ்கண்டவாறு அறிவிக்கப்படுகின்றன:

1.கட்டாய பதிவு: பெருமளவு கழிவு உற்பத்தியாளர்கள், பெருநகர சென்னை மாநகராட்சியின் இணைய தளத்தில் பதிவு செய்வது கட்டாயமாகும்.

2.காலக்கெடு: இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் தகுதி உடைய அனைத்து பெருமளவு கழிவு உற்பத்தியாளர்களும் பெருநகர சென்னை மாநகராட்சியின் இணையதளத்தில் பதிவை நிறைவு செய்ய வேண்டும்.

3. பின்பற்றாதவர்களுக்கு நடவடிக்கை: குறிப்பிட்ட காலத்திற்குள் பதிவு செய்யாதவர்களுக்கு திடக்கழிவுகள் மேலாண்மை விதிகள்–2026ன்படி உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும், பெருமளவு கழிவு உற்பத்தியாளர்கள் பின்வருவனவற்றை கட்டாயமாக கடைப்பிடிக்க வேண்டும்:

பெருமளவு கழிவு உற்பத்தியாளர்கள் தங்களால் உருவாக்கப்படும் கழிவுகளை, மக்கும் கழிவுகள், மக்காத கழிவுகள், அபாயகரமான வீட்டு உபயோகக் கழிவுகள் என்று தரம் பிரித்து அவற்றை அவற்றிற்குரிய குப்பைத் தொட்டிகளில் தனித்தனியே சேகரித்து வைத்து பெருநகர சென்னை மாநகராட்சி அல்லது அங்கீகரிக்கப்பட்ட கழிவுகள் மீட்டெடுப்பவர்களிடம் தனித்தனியே ஒப்படைக்க வேண்டும்.

பெருமளவு கழிவு உற்பத்தியாளர்கள் தாங்கள் உண்டாக்கும் உயிரியல் கழிவுகளை தங்கள் வளாகத்திலேயே உரமாக்கல் / உயிரி எரிவாயுவாக்குதல் போன்ற முறைகளில் செயல்படுத்த வேண்டும்.

திடக்கழிவு மேலாண்மை விதிகளின்படி வரும் டாந்திர அறிக்கையை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

உலர்கழிவு, சுகாதாரக் கழிவு மற்றும் சிறப்பு பராமரிப்புக் கழிவுகளை உள்ளூர் நிர்வாக அமைப்பு அல்லது அதனால் அங்கீகரிக்கப்பட்ட முகமைக்கு ஒப்படைக்க தேவையான ஏற்பாடுகளை செய்தல்.

பதிவிற்கான தனிப்பட்ட இணையதளம் விரைவில் பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் செயல்படுத்தப்படும். மண்டல அலுவலர்கள் (மண்டலம் 1 முதல் 15 வரை) நியமிக்கப்பட்ட பணியாளர்கள்/தூய்மை இந்தியா திட்ட பரப்புரையாளர்கள் (SBM – Animator) பெருமளவு கழிவு உற்பத்தியாளர்களுக்கு இணையதளத்தில் பதிவேற்றம் செய்வதற்கு தேவையான உதவிகளை வழங்குவார்கள்.

சுற்றுச்சூழல் பாதுகாப்பும் நிலையான கழிவு மேலாண்மையும் உறுதி செய்ய, அனைத்து நிறுவனங்கள், வணிக நிறுவனங்கள் மற்றும் குடியிருப்பு சங்கங்களும் இந்த அறிவுறுத்தல்களை கடைப்பிடிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மேலும் விவரங்களுக்கு பெருநகர சென்னை மாநகராட்சியின் www.chennaicorporation.gov.in என்ற அதிகாரப்பூர்வ இணையதளத்தில் தெரிந்து கொள்ளலாம்.

தி.மு.க. நெசவாளர் அணி
மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!
தி.மு.க. நெசவாளர் அணித் தலைவர் நன்னியூர் இராஜேந்திரன் அறிவிப்பு!

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி - மாவட்டப் பொறுப்பாளர் ஒப்புதலோடு தி.மு.க. நெசவாளர் அணியின் திருப்பூர் கிழக்கு மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

திருப்பூர் கிழக்கு மாவட்டம்

தலைவர் - **கலைவாணி டி.ஜி. தங்கமுத்து** 25, சோழன் வீதி, சென்னிமலை - 638051, திருப்பூர் மாவட்டம்.

துணைத் தலைவர் - கே. செந்தில்குமார் 124, ஈஸ்வரன் கோவில் வீதி, நத்தக்கடையூர், காங்கேயம் - 638108, திருப்பூர் மாவட்டம்.

அமைப்பாளர் - கே.எஸ்.பி. ராஜேந்திரன் 85, அரச்சலூர் ரோடு, சென்னிமலை - 638051, திருப்பூர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) என். சுப்பிரமணி 134, சிவ நாதபுரம், தீத்தாம்பாளையம் அஞ்சல், வெள்ளக்கோவில் - 638111, திருப்பூர் மாவட்டம். 2) பி.சி. நாட்ராயன் 6/101, பெரியாத்திபாளையம், மங்களப்பட்டி அஞ்சல், முத்தூர் - 638105, திருப்பூர் மாவட்டம். 3) எம். அர்ச்சுனன் முளையாம்பூண்டி, முளையாம்பூண்டி அஞ்சல், வெள்ளக்கோவில் வழி - 638111, திருப்பூர் மாவட்டம். 4) கே.எம். சதாசிவம் சாலை காட்டுத் தோட்டம், காடையூர், காங்கேயம் - 638701, திருப்பூர் மாவட்டம் 5) வி.சி. செல்வராஜ் 216, எல்.கே.சி. நகர், வெள்ளக்கோவில் - 638111, திருப்பூர் மாவட்டம். 6) ரா. ரமேஷ் 81(1), திரு.வி.க. நகர், காங்கேயம் - 638701, திருப்பூர் மாவட்டம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 19-02-2026.

நன்னியூர் இராஜேந்திரன்
தலைவர்
தி.மு.க. நெசவாளர் அணி

தி.மு.க. நெசவாளர் அணி
மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!
தி.மு.க. நெசவாளர் அணித் தலைவர் நன்னியூர் இராஜேந்திரன் அறிவிப்பு!

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி - மாவட்டப் பொறுப்பாளர் ஒப்புதலோடு தி.மு.க. நெசவாளர் அணியின் திருப்பூர் தெற்கு மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

திருப்பூர் தெற்கு மாவட்டம்

தலைவர் - **எஸ். துரைசாமி** 11/23, சௌண்டம்மன் கோவில் வீதி, சமத்தூர், பொள்ளாச்சி - 642123, திருப்பூர் மாவட்டம்.

துணைத் தலைவர் - தி. தர்மலிங்கம் 1/169டி, தெற்கு வீதி, பூளவாடி, உடுமலைப்பேட்டை - 642206, திருப்பூர் மாவட்டம்.

அமைப்பாளர் - பா. பாலசுப்பிரமணியம் 1412ஏ, செல்வபுரம், தாராபுரம் ரோடு, உடுமலைப்பேட்டை, திருப்பூர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) ஆர். நடராஜன் மலையாண்டிபட்டினம், குரல்குட்டை அஞ்சல், உடுமலைப்பேட்டை - 642154, திருப்பூர் மாவட்டம். 2) ராசு (எ) சி. கிருஷ்ணமூர்த்தி 5/139ஏ, உடுக்கம்பாளையம், உடுமலைப்பேட்டை, திருப்பூர் மாவட்டம். 3) எஸ். ராஜேந்திரன் 1/12, வீதம்பட்டி, கிழக்கு வீதி, உடுமலைப்பேட்டை - 642202, திருப்பூர் மாவட்டம். 4) கே. நடராஜ் 4/121சி, சின்னபாப்பனூத்து, விளாமரத்துப்பட்டி அஞ்சல், உடுமலைப்பேட்டை வட்டம், திருப்பூர் மாவட்டம் - 642207. 5) ர. மோகன்தாஸ் 55, பாரதிதாசன் தெரு, ஆத்தூர், கொழுமம், மடத்துக்குளம், திருப்பூர் மாவட்டம். 6) கு. மருதமுத்து 734, மெய்யம்மை காலனி, ஆஸ்பத்திரி மேடு, எஸ்.ஆர்.பட்டினம், ஜோத்தம்பட்டி, மடத்துக்குளம், திருப்பூர் மாவட்டம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 19-02-2026.

நன்னியூர் இராஜேந்திரன்
தலைவர்
தி.மு.க. நெசவாளர் அணி

தி.மு.க. நெசவாளர் அணி
மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!
தி.மு.க. நெசவாளர் அணித் தலைவர் நன்னியூர் இராஜேந்திரன் அறிவிப்பு!

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி - மாவட்டப் பொறுப்பாளர் ஒப்புதலோடு தி.மு.க. நெசவாளர் அணியின் விழுப்புரம் தெற்கு மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

விழுப்புரம் தெற்கு மாவட்டம்

தலைவர் - **கே.ஜி. சுப்ரமணியன்** 41/50, மெயின் ரோடு, கல்யாணம்பூண்டி, விக்கிரவாண்டி வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

துணைத் தலைவர் - வே. பரசுராமன் முருகன் கோவில் தெரு, நாதன் காடுவெட்டி, சென்னகுணம் அஞ்சல், கண்டாச்சிபுரம் வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

அமைப்பாளர் - என். ஞானவேல் முருகன் கோவில் தெரு, சென்னகுணம் அஞ்சல், கண்டாச்சிபுரம் வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) எம். செந்தில்முருகன் 4, முருகன் கோவில் தெரு, சித்தாத்தூர் அஞ்சல், கண்டாச்சிபுரம் வட்டம், விழுப்புரம் மாவட்டம். 2) அ. மூர்த்தி குளத்தங்கரைத் தெரு, எசாலம், வி.பிரம்மதேசம் அஞ்சல், விக்கிரவாண்டி வட்டம், விழுப்புரம் மாவட்டம். 3) மு. வினோத் 1/5, வடக்கு தெரு, வாழப்பட்டு, வீரமூர் அஞ்சல், விழுப்புரம் வட்டம், விழுப்புரம் மாவட்டம். 4) ர. பாபு 3/411, பிள்ளையார் கோவில் தெரு, நாதன்காடுவெட்டி, சென்னகுணம் அஞ்சல், கண்டாச்சிபுரம் வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 19-02-2026.

நன்னியூர் இராஜேந்திரன்
தலைவர்
தி.மு.க. நெசவாளர் அணி

தி.மு.க. விவசாய அணி
ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்
விவசாய அணிச் செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் அறிவிப்பு

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி - மாவட்டப் பொறுப்பாளர் ஒப்புதலோடு நீலகிரி மாவட்டத்திற்குட்பட்ட தி.மு.க. விவசாய அணியின் ஒன்றிய, நகர, பேரூர், அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

நீலகிரி மாவட்டம்

கூடலூர் ஒன்றியம்

அமைப்பாளர் - கே. கே. கங்காதரன் 2/532, மண்வயல், ஸ்ரீமதுரை அஞ்சல், கூடலூர், நீலகிரி மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) டி.தங்கச்சன் சுளிக்குன்னு, ஸ்ரீமதுரை அஞ்சல், கூடலூர், நீலகிரி மாவட்டம். 2) எ.டி. அணில்குமார் 2/519, மண்வயல், ஸ்ரீமதுரை அஞ்சல், கூடலூர், நீலகிரி மாவட்டம். 3) ஜே. பாரூக் 7/85, உதகை சாலை, மசினகுடி அஞ்சல், நீலகிரி மாவட்டம். 4) எ. ஜெயகுமார் முதுகுழி, செருமுள்ளி அஞ்சல், கூடலூர், நீலகிரி மாவட்டம். 5) ஜி. சுரேஷ் முதுகுழி, செருமுள்ளி அஞ்சல், கூடலூர், நீலகிரி மாவட்டம்.

மேலூர் ஒன்றியம்

அமைப்பாளர் - வி. தங்கராஜ் தூதூர் மட்டம், தூதூர் மட்டம் அஞ்சல், குன்னூர், நீலகிரி மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) ப. ராமமூர்த்தி 11/29, கெரடாலீஸ் தூதூர்மட்டம் அஞ்சல், குன்னூர், நீலகிரி. 2) ஆர். பாண்டியன் கிரேக்மோர் எஸ்டேட், கொலகம்பை, குன்னூர், நீலகிரி மாவட்டம். 3) ம. நாராயணன் 13/35, திலகர் நகர், தூதூர்மட்டம் அஞ்சல், குன்னூர், நீலகிரி மாவட்டம். 4) ஏ.பி. தாஸ் கிரேக்மோர் எஸ்டேட், கொலகம்பை, குன்னூர், நீலகிரி மாவட்டம். 5) பா. நல்லேந்திரன் 11/50, கெரடாலீஸ், தூதூர்மட்டம் அஞ்சல், குன்னூர், நீலகிரி மாவட்டம்.

கோத்தகிரி ஒன்றியம்

அமைப்பாளர் - ரா. ஜெயகுமார் 8/73, கொணவக்கரை, கோத்தகிரி, நீலகிரி மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) பி. ஜே. குள்ளன் பெத்தளா, பாம்டீ அஞ்சல், கோத்தகிரி, நீலகிரி மாவட்டம். 2) கா. மாதன் 5/25எ, கீழ்கேரி, ஜக்கணாரை, கோத்தகிரி, நீலகிரி மாவட்டம். 3) பெ. ஆலன் ஒர சோலை, நியாங் அஞ்சல், கோத்தகிரி, நீலகிரி மாவட்டம். 4) ஜே. அர்ஜீனன் பேட்லாடா, கொணவக்கரை அஞ்சல், கோத்தகிரி, நீலகிரி மாவட்டம். 5) ஐ. ராஜசேகர் 5/404, ஆச்சிலிஸ்டன், தட்டபள்ளம் அஞ்சல், கோத்தகிரி, நீலகிரி மாவட்டம்.

கீழ்கோத்தகிரி ஒன்றியம்

அமைப்பாளர் - பெ. முருகன் சுண்டட்டி, கோடநாடு அஞ்சல், கீழ் கோத்தகிரி, நீலகிரி மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) எஸ். மனோகரன் 4/75, மேல் பகுதி, தெங்குமரஹாடா, நீலகிரி மாவட்டம்.

2) ப. மணியன் நெடுகுளா, நெடுகுளா அஞ்சல், கீழ்கோத்தகிரி, நீலகிரி மாவட்டம். 3) எஜமானையா சுள்ளிகூடு, எஸ். கைகாட்டி அஞ்சல், கீழ்கோத்தகிரி, நீலகிரி மாவட்டம். 4) எஸ். எஸ்.குமார் 2/246, குருக்குத்தி, நெடுகுளா அஞ்சல், கீழ்கோத்தகிரி, நீலகிரி மாவட்டம். 5) ஜி. ராஜீ நெடுகுளா ஊர், நெடுகுளா அஞ்சல், கீழ்கோத்தகிரி, நீலகிரி மாவட்டம்.

குன்னூர் ஒன்றியம்

அமைப்பாளர் - ச. மகாலிங்கம் கோடமலை, ஸ்பிரிங் பீல்டு அஞ்சல், குன்னூர், நீலகிரி மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) ச. கணேஷ் பேரட்டி, பேரட்டி அஞ்சல், குன்னூர் , நீலகிரி மாவட்டம். 2) ஒய். எம். ராஜன் எடப்பள்ளி கிராமம், எடப்பள்ளி அஞ்சல், குன்னூர், நீலகிரி மாவட்டம். 3) ரா. தேவராஜ் இளித்துரை, எடப்பள்ளி அஞ்சல், குன்னூர், நீலகிரி மாவட்டம். 4) மா. சுந்தர்ராஜன் உபதலை, உ.பதலை அஞ்சல், குன்னூர், நீலகிரி மாவட்டம். 5) கே. ஆர். சுந்தரம் கோடமலை, ஸ்பிரிங் பீல்டு அஞ்சல், குன்னூர், நீலகிரி மாவட்டம்.

குன்னூர் நகரம்

அமைப்பாளர் - எம். ராஜேந்திரன் 41, காட்டேரி சாலை குன்னூர், நீலகிரி மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) கே. திவாகரன் 5/பி, காட்டேரி சாலை, குன்னூர், நீலகிரி மாவட்டம். 2) பி. சகாயநாதன் 56/59, விநாயகர் கோவில் தெரு, வண்ணாரப்பேட்டை, குன்னூர், நீலகிரி மாவட்டம். 3) சையது உமாயூன் 118, பஜார் தெரு, குன்னூர் அஞ்சல், குன்னூர், நீலகிரி மாவட்டம். 4) பி. நாராயணன் 155, நஞ்சாகவுடர் லைன், உமரிகாட் டேஜ், குன்னூர் அஞ்சல், குன்னூர், நீலகிரி மாவட்டம். 5) எம். பிரதீப் 89, பரசுராமன் தெரு, குன்னூர், நீலகிரி மாவட்டம்.

கூடலூர் நகரம்

அமைப்பாளர் - கே. சத்தியசீலன் 18/117, ஏழுமுறம், எம்.டி. நகர், கூடலூர், நீலகிரி மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) எம். ஜோசப் 2வது மைல், கூடலூர், நீலகிரி மாவட்டம். 2) ஆ. வெள்ளைச்சாமி 8/110, டாக்டர் குடியிருப்பு, நந்தட்டி, கூடலூர், நீலகிரி மாவட்டம். 3) உண்ணிகிருஷ்ணன் 17/497, அல்லூர் வயல், கூடலூர், நீலகிரி மாவட்டம். 4) ஜெ அனு 8/190, அண்ணா நகர், கூடலூர், நீலகிரி மாவட்டம். 5) டி.வி. சாஜி 12/132பி, விமலகிரி, அத்திப்பாளி அஞ்சல், நீலகிரி மாவட்டம்.

நெல்லியாளம் நகரம்

அமைப்பாளர் - ஆர். சந்திரன் வாளவயல், தேவாலா அஞ்சல், பந்தலூர், நீலகிரி மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) ஆர். ஆனந்தராஜ் கோழிக்கொல்லி, புளியம்பாறை அஞ்சல், பந்தலூர், நீலகிரி மாவட்டம். 2) சி. நித்யானந்தன் 7/170, நாடுகாணி, நாடுகாணி அஞ்சல், பந்தலூர், நீலகிரி மாவட்டம். 3) அ. நியாஸ் 12/312, ரிச்மவுண்டு எஸ்டேட், பந்தலூர், நீலகிரி மாவட்டம். 4) அ. கோகுலன் 3/671, வடமுலா, தேவாலா அஞ்சல், பந்தலூர், நீலகிரி மாவட்டம். 5) ஜெ. லோகநாதன் 18/110, நெடியாளம், மேங்கோரேஞ்ச், பந்தலூர், நீலகிரி மாவட்டம்.

சோலூர் பேரூர்

அமைப்பாளர் - ஆ. சத்தியராஜ் தார்நாடு மந்து, கிளன்மார்கன் அஞ்சல், சோலூர், உதகை, நீலகிரி மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) டி. எஸ். ராஜ் கிளன்மார்கன் அஞ்சல், சோலூர், உதகை, நீலகிரி மாவட்டம். 2) சி. நாகராஜ் கிளன்மார்கன் அஞ்சல், சோலூர், உதகை, நீலகிரி மாவட்டம். 3) கே. ராஜேந்திரன் கிளன்மார்கன், சோலூர் அஞ்சல், உதகை, நீலகிரி மாவட்டம்.

நடுவட்டம் பேரூர்

அமைப்பாளர் - ஆ. குமார் டி.ஆர். பஜார், நடுவட்டம் அஞ்சல், நீலகிரி மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) ஆ. மனோஜ் ஆசிங்டன், நடுவட்டம் அஞ்சல், நீலகிரி மாவட்டம். 2) க. சந்திரமோகன் 16-வது மைல், நடுவட்டம், நீலகிரி மாவட்டம். 3) எம். ராஜீ உட்புரூக், நடுவட்டம் அஞ்சல், நீலகிரி மாவட்டம்.

கீழ்குந்தா பேரூர்

அமைப்பாளர் - எம். ராமு பெரியார் நகர், குந்தாபாலம் அஞ்சல், நீலகிரி மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) பி. மகாலிங்கம் பெரியார் நகர், குந்தாபாலம் அஞ்சல், மஞ்சூர், நீலகிரி மாவட்டம். 2) ஆர். துரை காந்திபுரம், தொட்டகம்பை, மஞ்சூர், நீலகிரி மாவட்டம். 3) எல். ராஜன் கெச்சிக்கட்டி, தொட்டகம்பை அஞ்சல், மஞ்சூர், நீலகிரி மாவட்டம்.

பிக்கட்டி பேரூர்

அமைப்பாளர் - கே.பி. சந்திரன் கெரப்பாடு, பிக்கட்டி அஞ்சல், உதகை, நீலகிரி மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) சு. ரவிசந்திரன் குந்தா, ஒசட்டி, பிக்கட்டி அஞ்சல், உதகை, நீலகிரி மாவட்டம். 2) மா. மயில்ராஜ் சிவசக்தி நகர், பிக்கட்டி அஞ்சல், உதகை, நீலகிரி மாவட்டம். 3) க. ராமசந்திரன் தக்கர்பாபா நகர், எமரால்டு அஞ்சல், உதகை, நீலகிரி மாவட்டம்.

உலிக்கல் பேரூர்

அமைப்பாளர் - ஆறுமுகசாமி பென்காம் எஸ்டேட், உலிக்கல், நீலகிரி மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) பி. ராகுல் 18/144, பவானி எஸ்டேட், காட்டேரி அஞ்சல், குன்னூர், நீலகிரி மாவட்டம். 2) உதயகுமார் முத்தநாடு எஸ்டேட், காட்டேரி அஞ்சல், உலிக்கல், நீலகிரி மாவட்டம். 3) பாலமுரளி டேன்டீ, பக்காசுரன் மலை, நான்ச், குன்னூர், நீலகிரி மாவட்டம்.

கோத்தகிரி பேரூர்

அமைப்பாளர் - ஆர். ஆனந்தன் 1/130எ, ஒரசோலை, நியாங் அஞ்சல், கோத்தகிரி, நீலகிரி மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) ஆர். ரவி 129, கேர்பெட்டா, கோத்தகிரி அஞ்சல், கோத்தகிரி, நீலகிரி மாவட்டம். 2) அ. மணி 5/138, கன்னேரிமுக்கு, கோத்தகிரி, நீலகிரி மாவட்டம். 3) மா. ரமேஷ் 135, கேர்பென், நியாங் அஞ்சல், கோத்தகிரி, நீலகிரி மாவட்டம்.

கேத்தி பேரூர்

அமைப்பாளர் - ஆர். ஜெயகுமார் 8/68, கேத்தி, கேத்தி அஞ்சல், உதகை, நீலகிரி மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) நா. சரவணன் 9/55, கீழ்கேத்தி, கேத்தி அஞ்சல், உதகை, நீலகிரி மாவட்டம். 2) ச. விஸ்வநாதன் 1, தேனலை, கேத்தி அஞ்சல், உதகை, நீலகிரி மாவட்டம். 3) சி.அர்ஜீனன் 17/34, கேத்தி, பாலாடா, கேத்தி அஞ்சல், உதகை, நீலகிரி மாவட்டம்.

அடிகாரட்டி பேரூர்

அமைப்பாளர் - நா. சிவக்குமார் சேமந்தாடா, கொல்லிமலை அஞ்சல், அதிகரட்டி, நீலகிரி மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) சா. சதீஷ்குமார் கிளிஞ்சாடா, கிளிஞ்சாடா அஞ்சல், அதிகரட்டி, நீலகிரி 2) ச. ராம்ராஜ் கொல்லிமலை, கொல்லிமலை அஞ்சல், அதிகரட்டி, நீலகிரி மாவட்டம். 3) மு. பரமசிவன் செலிவிப் நகர், காட்டேரி அஞ்சல், அதிகரட்டி, நீலகிரி மாவட்டம்.

தேவர்சோலா பேரூர்

அமைப்பாளர் - ஆ. சுந்தரலிங்கம் 5/53, புழுக்கொல்லி, பாடந்தொரை, தேவர்சோலை, நீலகிரி மாவட்டம்

துணை அமைப்பாளர்கள் - 1) ஞானசேகர் 5/59, சேமந்தொரை, பாடந்தொரை அஞ்சல், தேவர்சோலை, கூடலூர், நீலகிரி மாவட்டம். 2) ராமராஜ் தேவர்சோலை பஜார், தேவர்சோலை, கூடலூர், நீலகிரி மாவட்டம். 3) மனோகரன் புளியம்பாறை, புளியம்பாறை அஞ்சல், தேவர்சோலை, கூடலூர், நீலகிரி மாவட்டம்.

ஓவேலி பேரூர்

அமைப்பாளர் - வி. பத்மநாதன் பெரியசூண்டி, ஓவேலி அஞ்சல், கூடலூர், நீலகிரி மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) பி. சந்திரன் சின்னசூண்டி, ஓவேலி அஞ்சல், கூடலூர், நீலகிரி மாவட்டம். 2) சி. கலைசெல்வம் காந்தி நகர், மேட்டூர், ஓவேலி அஞ்சல், கூடலூர், நீலகிரி மாவட்டம். 3) மா. நாகைய்யா காமராஜர் நகர், பாலவடாடி, ஓவேலி, கூடலூர், நீலகிரி மாவட்டம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600018
நாள்- 17.2.2026

ஏ.கே.எஸ்.விஜயன்
செயலாளர்
தி.மு.க. விவசாய அணி

தி.மு.க. விவசாய அணி
தென்காசி வடக்கு மாவட்ட துணை அமைப்பாளர் நியமனம்!
விவசாய அணிச் செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் அறிவிப்பு!

தென்காசி வடக்கு மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளராக **து. தினேஷ்,** (மெயின் ரோடு, குவளைக்கண்ணி, சங்கரன்கோவில் வட்டம், தென்காசி மாவட்டம்) அவர்கள்